Registered as a Newspaper

88 August
II ஆம் பிரிவு
(விஞ்ஞானம்)
ஆரம்பம்:
19-4-86 (காலை 7.30 மணி)
(விடுமுறை நாட்களில் மேலதிக வகுப்புக்கள்)
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

உதயன்

விலை ரூ. 1/=

7.30 - Physics
திரு. வர்ணம்
8.30 - Chemistry
திரு. இல்லைநாதன்
9.30 - Zoology
திரு. நாகநாதன்
10.30 - Botany
திரு. குகதாசன்
9.30 - 11.30-Pure & Appl. Maths
திரு. நவ்லையர்
விபரங்கட்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

கடிதம்:- 1 யாழ்ப்பாணம் புதன் ஞு சித்திரை மீ 15 உ திங்கள்கிழமை றிஜ்ரி 1406 ஷஃபான் பிறை 18 (28 04-1986) UTHAYAM A LIVELY TAMIL DAILY கதிர்:137

இலங்கை அரசுக்கு அபாய அறிவிப்பு

அமைச்சர் ஒருவர் விடுத்தார்?

கொழும்பு, ஏப் 28

இனப் பிரச்சினைக்கான தீர்வு இழுத்தடிக்கப்பட்டால் தமிழகம் கோரத் தவறிக்கும். அப்படி ஒரு நிலைமை ஏற்படும்போது இந்திய மத்திய அரசினால் நடுக்க முடியாத கட்டம் உருவாகும்

ஆகவால் இனப்பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வு கண்டாக வேண்டும் இல்லையேல் பல அசாதாரணமான விளைவுகளை எதிர்நோக்கவேண்டி ஏற்படலாம்.

இவ்வாறு அமைச்சர் ஒருவர் அரசாங்கத்துக்கு மிகப் பூடகமாக அபாய அறிவிப்புக் கொடுத்திருப்பதாக மிகவும் நம்பிக்கையாகத் தெரிய வருகிறது.

சம்பந்தப்பட்ட அமைச்சர் அண்மையில் இந்தியா சென்றிருந்தார் அங்கிருந்து நடு திரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இந்தியாவும் மக்களும் எங்களுக்கு உதவுவது

அவசியம் என்கிறார் ஆமிர்

லண்டன், ஏப்ரல் 27

பேச்சுக்கள் தோல்வி கண்டால் இந்தியாவும் ஈழத் மக்களும் எப்படியாவது எமக்கு உதவ வேண்டும்.

எப்படி உதவ வேண்டும் என்று நாம் கூற மாட்டோம்.

ஆனால் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தக்கூடிய முறையில் இந்தியா உதவ வேண்டும்.

இப்படி தமிழர் விடுதலைக் கட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் இந்தியர் சொன்னார். பி. பி. சி. உலக சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே திரு. ஆமிர்தலிங்கம் இந்தியர் சொன்னார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் திரு ஆமிர்தலிங்கம் மேலும் சொன்னார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஈழவிடுதலைப் போரையும்

இந்தியத் தேசிய நலனையும்

பிரித்து விட முடியாது

ஈ. பி. ஆர். எல். எவ். பேச்சாளர் பேட்டி

சென்னை, ஏப் 27

இந்திய தேசிய நலனை ஈழ விடுதலைப்போரையும் பிரித்து விட முடியாது

ஈழப் புரட்சிகர விடுதலை முன்னணியின் பேச்சாளர் திரு. லோகநாதன் கேதீஸ்வரன் இந்திய செய்தியாளர் ஒருவருக்கு அளித்த பேட்டியில் இதனைக் கூறியுள்ளார்.

திரு கேதீஸ்வரன் மேலும் சொன்னதாவது;

இப்போதைய நிலையில் ஈழத்தை இந்தியா அங்கீகரிக்காது; ராணுவ ரீதியிலும் இந்தியா தலையிடாது என்பதும் தெளிவு.

ஈழத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்று எதிர்பார்த்து நாம் ஆயுதம் ஏந்தவும் இல்லை.

எனினும் இந்திய வெளியுறவுக் கொள்கை ஏகாதிபத்தியத்துக்கு விரோதமானது.

இந்த சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தைப் பாராக்கும் விதத்தில் ஏகாதிபத்திய வல்லரசுகள் இலங்கையைப் பயன்படுத்துகின்றன.

இந்த நிலை தொடரும் வரை இந்திய தேசிய நலனையும் ஈழ விடுதலைப் போரையும் பிரித்து விட முடியாது.

இப்படி திரு கேதீஸ்வரன் சொன்னார்.

இந்தியக் குழு

எதிரணிகளுடனும் பேச்சுக்கள் நடத்தும்

கூட்டணியின் சார்பில் கொழும்பில் சூசைதாசன்

கொழும்பு, ஏப். 28

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து ஆராய்வதற்காக நாளை இலங்கை வரும் இந்தியத் தூதுக குழு, எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சித்தலைவர்கள் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா உட்பட முக்கிய

காங்கேசன் துறைமுகத்திற்கு சிப்பாய்கள் வந்தனர்

காங்கேசன்துறை, ஏப் 28

பலாலியில் இருந்து காங்கேசன்துறை வந்த இராணுவச் சிப்பாய்கள் அங்கு தயக்கு வந்திருந்த பொருள்களை லொறியில் ஏற்றிச் சென்றனர்.

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்த பொருள்களை எடுத்துச் செல்வதற்காக பலாலி இராணுவ முகாமில் இருந்து சிப்பாய்கள் நடமாடவிடப்பட்டனர். கனரக வாகனங்களிலும் துறைமுகத்திற்கு நேற்றுக்காலை வந்தனர். இதனால் இப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

அரசியல் அமைப்புகளின் பிரதிநிதிகளோடும் சிதம்பரம் குழு பேசி அவர்களின் கருத்துக்களையும் அறிந்துகொள்ளும்.

இனப் பிரச்சினைக்குரிய நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டம் ஒன்றை வகுப்பதற்கும், அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு கொழும்பில் கிடைக்கக்கூடிய ஒத்துழைப்புப்பற்றியும் அறிவதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாக இருக்கும்.

அரசிற்குள் நிலவும் கருத்து

அரசாங்கத் திற்குள்ளும் இனப் பிரச்சினை தொடர்பாக வெவ்வேறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய தூதுக்குழு உறுப்பினர்கள்

கொழும்பு, ஏப் 28

இந்தியக்குழுவில் தலைவராக வரும் இணை அமைச்சர் திரு பி சிதம்பரம், எம். ஏ சிதம்பரம் செட்டியாரின் புதல்வர் ராஜாசர் முத்தையா செட்டியாரின் மருமகன். ஹாவர்ட் பல்கலைக்கழ

(4 ஆம் பக்கம் பார்க்க)

அமைச்சர் லலித் தமிழ் படிக்கிறார்!

கொழும்பு, ஏப். 28

சஞ்சிகை வாசிக்கும்போது அல்லது உடற்பயிற்சி செய்யும்போது அல்லது தமிழ்ப் பாடங்களை படிக்கும் போதுதான் எனக்கு ஓய்வு கிடைக்கிறது

இப்படிக் கூறியிருப்பவர் வேறு யாருமல்ல தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலிதான். கொழும்பு ஆங்கில ஞாயிறு இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கோல்பேஸ் கடற்கரைக்கு நடந்து செல்லும்போது நான் முன்று தமிழ்ப்பாடங்களை படித்து விடுகேன்.

வருவது வரட்டும் என்று வாழ்க்கையை ஓட்டுகிறேன். நான் கவலைப்படுவது இல்லை அப்படி நான் கவலைப்படுவதாக இருந்தால் இப்போது செய்யும் வேலையை என்னால் செய்ய முடியாது.

கொழும்பில் நான் சைக்கிள் ஓட்டமுடியாதுள்ளது. பாதுகாப்புதான் அதற்குக் காரணம்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் நான் நடந்து செல்ல முடிகிறது பாதுகாப்புப் படையினரின் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையின் மத்தியில்—

இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார்.

6 போராளிகள் மரணம்?

கொழும்பு, ஏப். 28

போராளிகள் பயணம் செய்த படகு ஒன்று பருத்தித்துறைக்கு அண்மையில் நேற்றுக்காலை கடற்படையினரால் தாக்கி மூழ்கடித்ததாகவும்--

அதில் பயணம் செய்த ஆறு போராளிகளும் கட்டுக் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கந்தளாயில் 2,500 பேரை காணவில்லை!

கொழும்பு, ஏப்ரல் 28

கந்தளாய்க் குள அணைக்கட்டு உடைப்பினால் சுமார் 2,500 பேர் வரை காணாமற் போய்விட்டனர்.

இப்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி திரு. ஜ-கிரான் கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் சொன்னார்.

கந்தளாய் அணைக்கட்டு உடைப்பில் 125 பேர் மரணமானார்கள் 2 500 பேர் வரை காணாமற் போய்விட்டனர் என்று எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இப்படி ஜெனீவாவில் இருந்து வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி தெரிவித்தார்

இதனிடையே, 68 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் 57 பேரை இன்னும் காணவில்லை என்றும் திருமலை அரசாங்க அதிபர் திரு டி. எம் ஆரியரத்தினா சொன்னார்;

இலங்கையில் தங்க

30 சிப்பாய்கள் விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப் 28

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை கொழும்பு இராணுவ முகாமிலிருந்து 5 துவக்கு நோக்கி இராணுவ சிப்பாய்கள் சென்று கொண்டிருந்த டிரக் ஒன்று பஸ் ஒன்றுடன் மோதியதில் 30 இராணுவ சிப்பாய்கள் படுகாயம் அடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

40 இராணுவ சிப்பாய்களுடன் சென்றுகொண்டிருந்த டிரக் மானிப்பாய் வத்தை நெற்றுரரக வினையாட்டு மைதானத்திற்கு அண்மையில் வேகமாக சென்ற பஸ்ஸின் பஸ் ஒன்றுடன் மோதி தலைகீழாகப் புரண்டது. 30 இராணுவ சிப்பாய்கள் படுகாயம் அடைந்தனர்.

விபத்தில் இக்கியவர்கள் இராணுவ மருத்துவ பிரிவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது

விபத்துக்குள்ளான டிரக்கில் உல்பாகத்தினுள் இரண்டு சிப்பாய்கள் இக்கிக்கொண்டனர்.

பின்னர் பாரம் தூக்கும் இயந்திரம் மூலம் டிரக் தூக்கப்பட்டு அந்த இரண்டு சிப்பாய்களும் மீட்கப்பட்டனர்.

கந்தளாய்க் குளம்; உடைப்பின் பின்னணி விசாரிக்க உத்தரவு

கொழும்பு, ஏப். 28

கந்தளாய் குள உடைப்புக்கு உரிமை கோரியுள்ள போராளிகள் குழுவை வெளிநாட்டு அமைச்சு மூலமாக இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பொலீஸ் மா அதிபர் சிறில் ஹேரத்திற்கு ஜனதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேற்படி பணியை விடுத்திருக்கிறார்.

கந்தளாய் குள உடைப்புக்கு நாசவேலை காரணமா என்பதை விசாரிக்கும்படியும் ஜனதிபதி அவரைப் பணித்திருக்கிறார்.

அணைக்கட்டு உடைந்த பின்னர் அப்பகுதியில் வெடிமருந்து இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பதாகவும் அரச அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

தமிழைப் படிச்சாவது தமிழரை மடக்குவதற்கு வெற்றிகரமான திட்டம் ஒன்டை கண்டுபிடிப்பாங்கள் போலே கண்டு நினைச்சிட்டார் பேரன்..... அவர்...!

கபநேரம்

28 4- 1986

திங்கட்கிழமை

கபநேரம்:

11.58 முதல் 1.28 வரை

ராகுகாலம்:

7.28 முதல் 8 58 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொதுவானது

தமிழக அரசு கூட்டும் சர்வ கட்சி மாநாடு

மதுரை, ஏப் 27

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இலங்கை இனப் பிரச்சினை சம்பந்தமாக அனைத்துக் கட்சிகளின் மாநாடு ஒன்றைக் கூட்டியிருக்கிறார்.

இது சம்பந்தமான அழைப்புத் தனக்குக் கிடைத்துள்ளதாகவும் அக்கறையினால் வேறு அலுவல்கள் இருப்பதாக மாநாட்டில் கலந்து கொள்ள முடியாமல் இருப்பதாகவும் நிராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

தமிழீழ ஆதரவாளர் அமைப்புத் தலைவர் என்ற முறையில் கலைஞர் கருணாநிதி கட்டியுள்ள இந்தியக் கட்சிகளின் மாநாடு மே 4 ஆம் திகதி மதுரையில் ஆரம்பமாக உள்ளது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தவறினால், ராணுவத் தீர்வு காண வேண்டி நேரிடும் என்று இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி விடுத்துள்ள எச்சரிக்கையை, அந்த மாநாடு ஆராயும் என்று தி. மு. க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

செஞ்சிலுவைச் சங்கம் தரும் திடுக்கிடும் தகவல்

கச்சதீவு தமிழகத்துக்கே மீண்டும் சேரவேண்டும்

சட்ட சபையில் எம். எல். ஏ.

சென்னை, ஏப்ரல் 27

கச்சதீவு, மீண்டும் தமிழகத்துடன் இணைக்கப்படவேண்டும் இல்லையேல் தமிழர் பிரச்சினை, மீனவர் பிரச்சினையாக மாறிவிடும்.

இப்படி போர்வாரிப் புளக்கட்சி எம். எல். ஏ பி. கே. எம் முத்துராமலிங்கம் தமிழக சட்ட சபையில் பேசுகையில் எச்சரித்தார்.

திரு முத்துராமலிங்கம் மேலும் சொன்னதாவது

கச்சதீவு இருக்க வளம் நிறைந்தது. கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்திருக்கக்கூடாது என்று போர்வாரிட் புளக் தலைவர் மூக்கையா தேவர் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பினார்.

கச்சதீவை மீண்டும் தமிழகத்துக்கு, எடுத்துத் தரும்படி மத்திய அரசைக் கேட்க வேண்டும்.

இதைநாம் செய்யாவிட்டால் மீனவர் கொதித்து எழுந்து இலங்கை மீது படையெடுப்பர். தமிழர் பிரச்சினை மீனவர் பிரச்சினையாக உருவெடுக்கும். இப்படி திரு. முத்துராமலிங்கம் எச்சரித்தார்.

இஸ்ரவேலியர்களுக்கு விஸா தேவையில்லை

கொழும்பு, ஏப்ரல் 28

இஸ்ரவேலியர்கள் விஸா இல்லாமல் இலங்கை

கூட்டணியின் நிலைப்பாடு

சென்னை, ஏப்ரல் 27

வடக்கு – கிழக்கு இணைந்த ஒரு மொழி மாநிலத் தீர்வைத் தவிர வேறு எதையும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொள்ளாது.

கூட்டணி அரசியல் குழு வட்டாரங்கள் மேற்கண்ட கருத்தை திட்டவட்டமாகத் தெரிவித்தன.

கையில் 30 நிமிடங்கள் வரை தங்கலாம். இவர்களை அரசு இதற்கு அனுமதி அளித்துள்ளது.

இச் சலுகையைப் பெறும் 37 ஆவது நாடு இஸ்ரவேல் ஆகும்.

பொதுநல அமைப்பு நாடுகளுக்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், இந்தச் சலுகையை இலங்கை ஏற்கனவே வழங்கியுள்ளது

இச் சலுகை ஆமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் வழங்கப்படவில்லை

இளைய தலைமுறையின் இதயங்களை ஈர்க்கும் இன்றைய நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் அகதிமுகாம்

சுன்னாகம் பிரஜைகள் குழு ஏற்பாடு

உதவி வழங்க கோரிக்கை

உடுவில், ஏப் 28

சுன்னாகத்தில் புதிய அகதிமுகாம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. மயிலிட்டி, வயாவிளான், பலாலி ஆகிய பகுதிகளிலிருந்து அரச படைகளின் பயமுறுத்தல்களால் தமது வீடு வாசல்களை விட்டு வெளியேறிய மக்கள் சுன்னாகத்தில் ஒன்று சேர்ந்து சுன்னாகம் பிரஜைகள்குழுவிடம் உதவி கோரினர்.

இந்த அகதிகளை பராமரிக்கும் பொறுப்பை சுன்னாகம் பிரஜைகள்குழு ஏற்று மயிலணி சைவவித்தியாசாலையில் அகதிகளை தங்க இடவசதி செய்தது.

சுன்னாகத்தில் புதிய அகதிகள் முகாம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து பல நூற்றுக்கணக்கான அகதிகள் சுன்னாகத்துக்கு படையெடுத்துள்ளனர்.

அகதிகளுக்கு உதவுவது இன்றைய காலகட்டத்தில் மிக உத்தமமான தர்மம் என்பதை மனதில் கொண்டு உடை, உணவு, குழந்தைகளுக்கான பால்மா முதலியவற்றை அன்பளிப்பு செய்யுமாறு சுன்னாகம் பிரஜைகள் குழுத்தலைவரும் முன்னாள் கல்விப்பணிப்பாளருமான திரு. தி. மாணிக்கவாசகர் பொதுமக்களையும் பொதுஸ்தாபனங்களையும் கேட்டுள்ளார்

ஆபத்தான நிலையில் கான்ஸ்டபிள்

கொழும்பு, ஏப். 28

வெள்ளவத்தைக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த கான்ஸ்டபிள் ஆரியரத்ன ஆபத்தான நிலையில் தொடர்ந்து இருந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தினால் வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையத்துக்குச் சுமார் 25,000 ரூபா வரையான சேதமே ஏற்பட்டதாம்.

சூசையப்பர் திருவிழா

அச்சுவேலி, ஏப். 28

தொழிலாளர்களின் பாதுகாவலர் புனித சூசையப்பர் திருவிழா, அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

தினமும் அருளுரைகள் வழங்கப்படுமென்றும், மே 1 ஆம் திகதி காலை நிறைநாள் பலிப்பூசை நடைபெறும் என்றும் ஆலயப் பங்குத்தந்தை அருட் திரு றெக்னோ அடிகளார் தெரிவித்தார்.

பெயர் பெற்றுத் தரக்கூடிய படம் ஒன்றைத் தருவேன்

சொல்பவர் இயக்குநர் பிரசாத்

ஆடையாறு திரைப்படக் கல்லூரியில் டைரக்ஷன் பயிற்சி பெற்று பட்டயம் பெற்றுக்குள் பணியாற்ற வந்த இளைஞர் டி. கே. பிரசாத். இவர் இயக்கிய முதல் படம் 'இதயத்தில் ஓர் இடம்'

மலையாளத்தில் கதிர் கதாநாயகனாக நடிக்க 'சத்தியத்தின்றெ நிழலில்' என்ற பெயரில் வெளிவந்து சக்கை போடு போட்ட படத்தின் தமிழ் வடிவம் அது.

கேரளத்தில் பனிகளைத் தட்டிச் சென்ற அந்தப் படம் தமிழில் எதிர்பார்த்த அளவிற்குச் சரியாகப் போகவில்லை.

காரணம் - அதில் கதாநாயகனாக நடித்த



ஸ்ரீ காந்துக்கு அப்போது மார்க்கெட் இல்லாததும், வர்ணப்பட யுகத்தில் கறுப்பு வெள்ளையில் படம் அமைந்து போய் இருந்ததும் தான்.

அதற்குப்பின் பிரசாத் இயக்கிய படம் ஆராதனை. படத்தின் நாயகன் சுமன் தமிழில் படம் சரியாக ஓடவில்லை என்றாலும் தெலுங்கில் 'டப்' செய்யப்பட்டு படம் நூற்றைம்பது நாட்கள் ஓடி சாதனை புரிந்திருக்கிறது.

பிரசாத் இயக்கி வெளிவந்த மூன்றாவது படம் 'ராமன் வீர ராமன்'. வர்த்தக ரீதியாக படம் வெற்றி பெறவில்லை.

திரைப்படக் கல்லூரியில் படித்த பிரசாத் முழுக்க முழுக்க வர்த்தக ரீதியான படங்களையே இதுவரை இயக்கியுள்ளார். வித்தியாசமான படங்களை அவர் இயக்கவில்லை.

அதற்கான காரணத்தை அவரே விளக்குகிறார்:

"மாறுபட்ட படங்களைத் தரவேண்டும் என்பது எனது ஆசை. ஆனால் அதற்கான சூழ்நிலைகள் இன்னும் இல்லை. ஒரு படம் வர்த்தக ரீதியாக வெற்றி பெற்றால் தான், ஒரு இயக்குநருக்கு அடுத்த படமே வரும்

நவீர, வித்தியாசமாகச் செய்யும் படங்களை விட, பொழுதுபோக்கு நிறைந்த ஜனரஞ்சகப் படங்களைத் தரும் வரத்தான் மக்கள் ரசிக்கிறார்கள். அந்தக் கண்ணோட்டத்தில் தான் நான் படங்களைத் தருகிறேன்-

என்றாலும், எனக்கு என்று நிலையான ஒர் இடத்தைப் பிடித்தவுடன் பெயர் பெற்றுத் தரக்கூடிய மாதிரியான படம் ஒன்றைத் தருவேன் என்பது மட்டும் நிச்சயம் என்றார்.

ஆஸ்பத்திரி கூரையில் செஞ்சிலுவை சின்ன அடையாளம்

பலாலி, ஏப் 28

தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியின் மேற்கூரையில் செஞ்சிலுவைச் சின்னம் பெரிய அளவில் பொறிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் தெல்லிப்பளைப் பகுதியில் ஹெலிக்கொப்டரால் தாக்குதல் நடத்தப்பட்டபோது யூனியன் கல்லூரி உட்பட மூன்று பாடசாலைகளும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகமும் சேதம் அடைந்தது தெரிந்ததே

இதே போன்று அரசினர் ஆஸ்பத்திரியும் பாதிக்கப்படாது இருக்கவே செஞ்சிலுவைச் சின்ன அடையாளம் மேற்கூரையில் பொறிக்கப்பட்டுள்ளது

ஆஸ்பத்திரியின் எல்லாக் கட்டடக் கூரைகளிலும் இச்சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கரவெட்டி, நவிண்டில் பகுதிகளில் கொள்ளை முயற்சி முறியடிப்பு

கரவெட்டி, ஏப். 28

கரவெட்டி, நவிண்டில் பகுதியில் கொள்ளை முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

கரவெட்டியில் அத்துளு அம்மன் ஆலயத்திற்கு அண்மித்த ஓர் கடையிலும் நவிண்டில் பகுதியில் ஓர் ஒழுங்கையிலும் சில தினங்களுக்கு முன் இந்த கொள்ளை முயற்சி சம்பவங்கள் இடம்பெற்றன.

கரவெட்டி அத்துளு வீதியால் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆயுதம் தாங்கிய நால்வர் தம்பையா கடைக்கு முன்னால் ஓர் மோட்டார் சைக்கிளை நிறுத்தி தம்பையாவிடம் குரடு கேட்டனராம். மற்றைய மோட்டார் சைக்கிள் சற்றுதூரத்தில் நின்றது.

தம்பையா குரடு கிடையாது என கூறவும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

அதே வேளை திருமதி தம்பையாவின் கழுத்தை தடவினராம் ஓர் இளைஞர். இதற்குள் வெளியே வந்த தம்பையா சத்தமிட்டு மக்களை கூப்பிட்டதும் இளைஞர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

பேரழகின் அற்புதம் பிறக்கும் கலை பரதம்

சொக்கன் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஏப், 28

ஓசை ஒலியின் ஒத்திசையில், தாளலய ஒழுங்கமைப்பில் அதன் வழி ஆடுங்கலை எனின் ஆங்க அலைவுகளால் கலையின் அற்புதப் பேரழகு பரதத்தில் வெளிப்படுகிறது.

இவ்வாறு எழுத்தாளர் சொக்கன் குறிப்பிட்டார்.

வேல் ஆனந்தன் நாட்டிய அமயம் தயாரிக்கும் "என்னதான் முடிவு" நடன நாடக தொடக்கப் பூஜைநிகழ்ச்சியில் கலந்து கொண்டு திரு. சொக்கன் உரையாற்றினார்.

கலாநிதி மௌனகுரு தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

டாக்டர் பிலிப் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த இந்த நிகழ்ச்சியில் நாடகக் கலைஞர் சண்முகலிங்கமும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

உருவாகும் தயாரிப்பில் இடம்பெறும் ஆடல் வடிவங்கள் சிலவற்றை அதில் பங்கேற்கும் இளங் கலைஞர்கள் மூவர் ஆடிக்காட்டினர்.

ஆடற்கலையின் அற்புத அம்சங்களை பயன் மிகுந்த பணிகளின் காலத்தேவைக்குரிய பங்காக சாதாரண மக்களிடம் கொண்டு செல்வதே தமது நோக்கம் என அவர் அப்பொழுது குறிப்பிட்டார்.

மண்டூர் சம்பவங்கள்

இணைப்பு அதிகாரி கவனத்துக்கு அரச அதிபர் கொண்டு வந்தார்

இறந்தோர் அடையாளம் காணப்படாது அடக்கம்

மட்டக்களப்பு, ஏப். 28

மட்டக்களப்பு மண்டூர் கிராமத்தில் கடந்த புதன்கிழமை நந்த சம்பவங்களை அரசாங்க அதிபர் திரு எம். அந்தோனிமுத்து அப்பாறை இணைப்பு அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இக்கிராமம் கதிறி வளைக்கப்பட்டுச் சோதனையிடப்பட்ட சமயம் 53 பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காக கொண்டை வட்டுவான் முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டனர்

ஏழுபேர் பலியானார்கள்.

கைதுசெய்யப் பட்டவர்களின் பெற்றோர் அரசாங்க அதிபரிடம் நேற்று முறையிட்டுள்ளனர்.

இதனையடுத்தே அரசாங்க அதிபர் இணைப்பு அதிகாரியிடம் தொடர்பு கொண்டார்.

கைதானவர்கள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனரென்றும் விசாரணையின்பின்னர் நிரபராதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் அப்போது இணைப்பு அதிகாரியால் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் யாரென தெரியாமல் உறவினர்கள் தவிப்பதாக அரசாங்க அதிபர் பிரஸ்தாபித்தபோது ஏழு பேரின் சடலங்களும் அடையாளம் காணப்படாத நிலையில் படையினரால் அடக்கம் செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டதாம்

படையினரால் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் இயந்திரப் படகை மீண்டும் கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைப்பதாக தெரிவித்த இணைப்பு அதிகாரி முருகன் ஆலயம், மாரியம்மன் ஆலயம் ஆகிய இரு இடங்களில் நடைபெற்றதாகக் கூறப்படும் படையினரின் அத்துமீறிய செயல்கள் தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாதெனவும் கூறினாராம்.

கோயில்கள் அழிப்பு: பிரசைகள் குழு இராசுவுக்கு கண்டனச் செய்தி

உடுவில், ஏப்ரல் 28

தனிமனித சுதந்திரம் பற்றி நிறையப் பேசும் நீங்கள் அரசு தமிழ் மக்களின் மதசுதந்திரத்தை அலட்சியம் செய்யும் விதத்தில் நயினை அம்பாள் கோயிலிலும், செல்வச்சந்நிதி முருகன் கோயிலிலும் நடத்திய அநாகரிக தாக்குதல்களையும் கொலை வெறியையும் நாம் வன்மையாக கண்டிக்கிறோம். நாகரீக உலகம் தங்கள் செயல்களை வைகொட்டிச் நகைக்கிறது

சுன்னாகம் பிரசைகள் குழு இந்து கலாசார அமைச்சர் திரு. செ இராசதுரைக்கும், ஜனாதிபதி திரு. ஜே.ஆர் ஜெயவர்த்தனாவுக்கும் அனுப்பிய கண்டனச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

கோடிக்கணக்கான இந்துக்களின் இதயம் அழவும் — கண்ணீர் கசியவும் தங்கள் நடவடிக்கை காரணம் என்பதால் அந்தக் கண்ணீருக்கு ஒரு நாள் தங்கள் ஆட்சி பதில் சொல்லியே தீரவேண்டும் எனவும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனித்தம்பிக்கு சர்வதேச புகழ்

யாழ்ப்பாணம், ஏப் 28

கரவெட்டி தேவரையாவி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும் சமாதான நீதிவானுமாகிய திரு மு. சி. சீனித்தம்பி கல்விக்கும், சமூகத்திற்கும் செய்த தொண்டு காரணமாக அவருக்கு சர்வதேச புகழ் கிடைத்துள்ளது.

இங்கிலாந்திலுள்ள கேம்பிறிட்ஜ் சர்வதேச வாழ்க்கைச் சரித்திர வெளியீட்டுக் கழகத்தினரால் 'சாதனை செய்த மனிதர்' ஆக அவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களிடமிருந்து வெளியிடவிருக்கும் 'சாதனை செய்த மனிதர்கள்' என்னும் தொகுப்பு நூலில் அவரின் வாழ்க்கை வரலாறு சேர்க்கப்படவுள்ளது.

திரு. சீனித்தம்பி சமூக சேவை தாயனமாகிய வதிரி அபிவிருத்தி நிறுவனத்தினதும் அதன் கீழ் இயங்கும் நூலகச் சேவைகள் சபையினதும் ஸ்தாபகத்தலைவராவார்.

1985 ஆம் ஆண்டு தென்ஆசிய பிராந்திய புனருத்தாரண கழகத்தினரால் வழங்கப்பட்ட தொழுநோப் பதிகம் அவருக்குக்கிடைத்தது. சமூக சேவையில் பிராந்திய தலைமைத்துவப் பயிற்சியையும் அவர் பெங்களூரில் பெற்றுள்ளார்.

அதிபராக 1980 இல் ஓய்வு பெற்றபின் நலிந்த மக்களின் நல்வாழ்வுக்காகச் சமூக சேவையில் அவர் பெரிதும் ஈடுபட்டார்.

வதிரி முதிர்ந்த விவசாயிகள் கழகத்தின் தலைவராகவும், கரவெட்டி பிரஜைகள் குழு வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்க உதவித்தலைவராகவும் உடுப்பிட்டி வலிகாமம் கூட்டுறவு ஆலய பத்திரி நிர்வாகக் குழு உறுப்பினராகவும் அங்கம் வகிக்கின்றார்.

கலி செஞ்ச்சுவோசியஸ் கொழும்பு ஆனந்தா செக்ஸ் இராஜதானிக் கல்லூரிகளினதும் அவர் பழைய மாணவராவார்.

இந்த ஆண்டு ஜூலை 13 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை அமெரிக்காவின் நியூஜேர்சியில் நடைபெறும் சாதனையாளர் காங்கிரஸ்ஸுக்கு வருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது,

பதவி உயர்வு

நல்லூர், ஏப் 28

கடந்த 26 ஆண்டுகளாக யாழ் போதனா வைத்தியசாலையில் வரவேற்பாளராகக் கடமை யாற்றிய திரு. யோசப் இம்மனுவல் வைத்தியசாலை மேற்பார்வையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

எதிர்வரும் மே மாதம் பதினைந்தாம் திகதிமுதல் தமது பதவியை ஏற்றுக் கொள்ளும் இவர் பல வருடங்களாக தொழிற் சங்கம் ஒன்றில் முக்கிய பதவி வகித்து வருகின்றார்.

வைத்தியசாலை ஊழியர்கள் மத்தியில் நற்மதிப்பையும் இவர் பெற்றுள்ளார்.

நினைவஞ்சலி



திரு. தில்லையம்பலம் மகேந்திரராஜா (குமார்)

மலர்வு: 28-07-1957 சிதைவு: 09 05-1985

மனதிற் குடும்பமெனும்
சுயநலத்தின் பற்றறுத்து
இனவொடுக்கல் தனைக் கண்டு
இனவெறியர் தனையடக்க
சினத்துடனே புறப்பட்ட
செழுந்தமிழின் வீரனே! நீ
இனத்தின் விடிவுக்காய்
இன்னுயிரை ஈந்தனையோ!

உள்ளத்தில் எம் முனத்தில்
உள்ளக் கோவிலாய்
வெள்ளை மனத்துடனே வீற்றிருந்தீர்
இன்று எம்மை
வெள்ளமாய்த் தவிக்க விட்டு
வேறெங்கே உறங்குகின்றீர்
உள்ளம் இருக்குமட்டும் உம்
நினைவு வாழும் கண்மணி.

உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்.
தந்தை, தாய், சகோதரர்கள்
உற்றார், உறவினர்.

வவுனியா.
27-04-1986.

1வது நினைவஞ்சலி



திரு. இளையதம்பி கனகசிங்கம்

தாயின் மடியில் 06 - 06 - 1964 மண்ணின் மடியில் 09 - 05 - 1985

திதி: 28 - 04 - 1986

எங்கே சென்றாய்?
உனது
இரத்தமொழுகும் கரங்கள்
வாழ்வுக்காக மரணிப்பதைத் தவிர
வேறெதையோ
எமக்கு உணர்த்தவில்லை.

கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

பிரிந்து வாடும்
தந்தை, தாய், சகோதரர், சகோதரிகள்

1 ஆம் ஆண்டு நினைவு திதி

செல்வன்

ஆறுமுகம் ஞானேஸ்வரன்

(மிசோராம்)

ஆண்டவன் படைப்பு		வீர மரணம்
20		9
★		★
7		5
★		★
63		85

உருகுதே உள்ளமெல்லாம், ஓராண்டு சென்றனவே, இருள் சூழ்ந்த பூமிதனில் இருள் அகற்ற சொர்காவில் நோக்கி சென்றாயோ? பெற்ற அன்னை உன் வரவை காத்து நிற்க நீ வீரக்!!! என்று களத்தில் மாண்டாயோ!!! உனது இலட்சியக் காரியம் படைக்கும்!!!

உமது பிரியாய் கண்ணீர் மழை பொழியும்

ஆ. கனகம்மா
மல்லிகை காரைநகர்.

அன்னை

உருக்கமான வேண்டுகோள்

நல்லிதயம் கொண்டோர்க்கு

27 ஆம் திகதி இரவு எனது வீட்டில் பணம் உட்பட ரி. வி., டெக், ரேடியோக்கள், கடிகாரம், வளையல் என்பன இனம் தெரியாத ஆயுதபாணிகளால் கொள்ளையிடப்பட்டது.

இதனால் எனது மன, உடல் நிலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனக்குப் பல அரிய வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் கிடைத்தும் மக்களின் சேவைதனம் கருதி, கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளராக பணிபுரிகிறேன். பல கோடி ரூபா பெறுமதி வாய்ந்த வடமாநில நீர்ப்பாசன திட்டங்கள் என் பொறுப்பிலுள்ளன. எனது உடல், மன நிலைகள் பாதிக்கப்படுவதால், எம் மக்களின் தேவைகளே பாதிக்கப்படுகின்றன என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது காரும் சென்ற ஆண்டில் கொள்ளையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. நல்லிதயம் கொண்டவர்கள் இவற்றையிட்டு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

த. சுப்பிரமணியம்
249, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

மனமே முக்கியம். மனம் ஒரு நிலைப்படும்போது ஒருவன் எல்லாச் சித்திகளையும் பெறுகிறான். ஆகவே மனமே முக்கியம் என்பதை நினைத்துக்கொள்.

– அன்னை சாரதாதேவி

உதயன்

இல, 15, 2ஆம் ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் 28.04.86

தொலைபேசி: 24805, 22073

த. பெ. 28

சமாதானத் தீர்வு சாத்தியமாகுமா?

இலங்கை இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கு மற்றொரு முயற்சி.

நாளை செவ்வாய்க்கிழமை இந்திய மத்திய அரசு இனை அமைச்சர் திரு. பி சிதம்பரம் தலைமையில் தூதுக்குழு ஒன்று கொழும்பு வருகிறது.

அந்தக் குழுவில் இனப்பிரச்சினை சம்பந்தமாகப் பேசுவதற்கு அடிக்கடி இலங்கை வந்து கலந்துகொள்ளும் இலங்கை அரசாங்கத்தின் 'செல்லப்பிள்ளை' எனக் கருதப்படுபவருமான திரு. பண்டாரியும் வருகிறார் மற்றும் வெளியுறவு அமைச்சைச் சேர்ந்த திரு மத்தாயஸ், சட்ட ஆலோசகர் திரு. பாலகிருஷ்ணன் ஆகியோர் தூதுக்குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

பார்த்தசாரதியும் பண்டாரியும் தவித்து வந்து, இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயத் தீர்வைக் காண்பதற்கு ஏற்ற விதத்தில் இலங்கை அரசை "வளைத்து எடுக்க" முடியாமற் போயிற்று. இப்போது ஒரு குழுவே வருகிறது.

அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்தாக் காட்டுக் கொண்டு இராணுவத் தீர்வுத் திசையில் நடந்து கொண்டிருக்கும் இலங்கை அரசு, இம்முறையாவது தனது அடம்பிடியைத் தளர்த்துமா என்பதே கேள்வி.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய ஒரு நியாயத்தீர்வைக் காண்பதற்குச் சற்றேனும் விட்டுக் கொடுப்பதற்கு இலங்கை அரசு தயாரா என்பது இன்னமும் தெரியவில்லை.

ஆக்கக் கடைசியாக அமைச்சர் ஹமீது மூலம் சமர்ப்பித்த இரண்டு பக்க யோசனையில் தமிழ் மக்கள் திருப்திப்படும் அளவுக்கு எதுவுமே இல்லை. இதனை ஏற்கனவே இப்பத்தியில் விளக்கி இருந்தோம்.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இலங்கை அரசு ஆக்கூடுதலாக வழங்கக்கூடியது என்ன? இதனை அறிந்து எழுத்தில் வாங்கிச் செல்வதே இந்தியத் தூதுக் குழுவின் முக்கிய பணியாக இருக்கும் என்று அறியப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, இந்தியாவைப் பொறுத்தவரை, இனப்பிரச்சினை சம்பந்தமாகப் பேசுவதற்கு இலங்கை வரும் கடைசித் தூதுக்குழுவும் இதுவாகவே இருக்கும் எனச் சொல்லப்பட்டது.

அதற்குப் பின் இந்தியா, இலங்கை அரசுக்கும் தமிழர்களுக்கும் நியாயமான தீர்வைத் தானே தயாரித்துச் சமர்ப்பிக்கக் கூடும். அதுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றால் இந்திய மத்திய அரசு இவ்விஷயத்தில் இருந்து மெதுவாக — நைசாக நழுவிவிடலாம் என்ற கருத்தும் இருந்து வருகிறது.

இந்தியாவின் நோக்கும் போக்கும் நிலையும் எப்படி இருந்தாலும் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் பெரும் பொறுப்பு சிங்கள மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் இலங்கை அரசாங்கத்தையும் தமிழர் அமைப்புக்களையும் சார்ந்தது.

கடந்த முப்பத்தெட்டு வருடங்களாக தீராநோயாக இருந்து வரும் இனப்பிரச்சினைக்கு இப்போதாவது மருந்து காணப்படா விட்டால் இலங்கை நிச்சயம் சுடுகாடு! அதன் மக்கள் இறந்தொழிவதும் நிச்சயம்!!

சமாதானத் தீர்வு என்று போய் அரசு, தான் விரும்பியதைத் திணிக்க முயல்வது அபத்தம். இதுவே கடந்த மூன்று வருடங்களாக நடந்து வருகிறது.

சிங்கள மக்களுக்குச் சுதந்திரம் எப்படியோ அது போலவே தமிழ் மக்களுக்கும் சுதந்திரம் உயிர் போன்றது.

தங்கள் சொந்த மண்ணில் தாம் வாழவும் தம்மைத் தாமே ஆளவும் தமிழ் மக்களுக்கு உரிமை உண்டு.

இந்த இரண்டு சிறிய உண்மைகளையும் அரசும் அதன் தலைவர்களும் புரிந்து கொண்டு நடந்தால், இனப்பிரச்சினையைத் தீர்ப்பது கடினமான காரியமல்ல.

பேச்சுவார்த்தை, சமாதானம் என்றால் சம்பந்தப்பட்ட இரு சாராரும் விட்டுக் கொடுத்து வாங்க வேண்டும் என்பது மரபு. ஆனால் தமிழர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் அதற்குப் பின்னின்றதில்லை. திம்பு மாநாட்டில் முன் வைக்கப்பட்ட அடிப்படை அம்சங்களில் இருந்து இனி எதனையும் விட்டுக் கொடுக்க நியாயமில்லை.

இதனைத்தான் நாம் தருவோம், விருப்பமானால் பெறுங்கள், அதற்கு மேல் எதுவும் தரமுடியாது என்ற அகம்பாவப் போக்கு அரசுக்கு இருக்கும் வரை இனப்பிரச்சினைக்கு இந்தியாவாலும் சரி, வேறு எவராலும் சரி சமாதானத் தீர்வு காணமுடியாது!

உள்ளூராட்சி

ஊழியர்களை ஒன்றிணைத்து புதிய சங்கம் உதயம்

யாழ்ப்பாணம், ஏப். 28 வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி ஊழியர்களை ஒன்றிணைக்கும் முகமாக, வடமாநில ரீதியிலான ஐக்கிய உள்ளூராட்சி ஊழியர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.

இதன் அங்குரார்ப்பண கூட்டம் இம்மாதம் 19 ஆம் திகதியன்று ஐக்கிய தொழிலாளர் சம்மேளனப் பணிமனையில் நடைபெற்றது.

உள்ளூராட்சி வரலாற்றிலேயே பெரும்பாலான தொழிலாளர்களை உள்ளடக்கி அமைக்கப்பட்ட தொழிற் சங்கம் இதுவாகும். இவ்வாறு இக்கூட்டத்தின் அமைப்பாளரும், பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்ட வருமான திரு ஜயகன் தெரிவித்தார்.

வட பகுதியிலுள்ள சகல உள்ளூராட்சி அமைப்புகளையும் சேர்ந்த ஊழியர்களும் இதில் சேர்ந்து கொண்டு இந்த சங்கத்தை பலப்படுத்தும்படி அந்தத் தலைவர் திரு. சோமலிங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

முன்னாள் அமைச்சர் வீட்டிற்கு

குண்டு வைத்த இராணுவ மேஜர்

புதுடில்லி, ஏப்ரல் 27 முன்னாள் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் வீட்டிற்கு குண்டு வைத்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களிடமிருந்து வெடிமருந்துகள், 22 லிபியர்களை

பிரிட்டன் நாடு கடத்தியது

லண்டன், ஏப்ரல் 27 பிரிட்டிஷ் அரசாங்கம் தனது நாட்டில் இருந்து 22 லிபியர்களை நாடு கடத்தியது.

மேலும் பிரிட்டனில் பயிற்சி பெற்று வந்த 300 லிபியர்களின் பயிற்சியை முடிவுக்கு கொண்டு வருவதாகவும் பிரிட்டன் அறிவித்தது.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையாகவே இது எடுக்கப்படுகிறது.

வயர்கள் ஆயுதங்களும் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முகர்ஜி குடும்பத்துடன் மிக நெருங்கியவர் என்று கூறப்படும் இந்த இராணுவ மேஜர் கைது செய்யப்பட்டதை அடுத்து–

முகர்ஜி வீட்டிற்கு குண்டு வைத்தது–

அவரது காரை கடத்திச் சென்று எரித்தது ஆகியவை தொடர்பான முழுத்துப்பும் இடைத்திருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர்.

சீனவெடியால் அறுவர் மரணம்

புதுடில்லி, ஏப்ரல் 27 தென்னிந்திய கோயில் ஒன்றில் நடைபெற்ற திருவிழாவில் சீன வெடி கொளுத்தியது காரணமாக ஆறுபேர் கொல்லப்பட்டனர்.

நூறுபேர் காயம் அடைந்தனர்.

சர்வாதிகாரிகளுக்கு றேகன் கடும் எச்சரிக்கை

விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பு என்கிறார்

ஹொனலலு, ஏப்ரல் 27

சர்வாதிகாரிகளுக்கும் மற்றும் பயங்கரவாதிகளுக்கும் அமெரிக்க ஜனாதிபதி றேகன் கடும் எச்சரிக்கை விடுத்தார்.

அவர்களது கோழைத்தனமான செயல்களினால் ஏற்படும் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பாளிகள். இதனை ஏற்க அவர்கள் தயாராக இருக்க வேண்டும்— இப்படி அமெரிக்க அதிபர் கூறினார்.

டோக்கியோவில் நடைபெற்ற இருக்கும் பொருளாதார உச்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு செல்லும் வழியில் ஹொனலலுவில் வைத்து அவர் இவ்வாறு கூறினார்.

உலகம் காட்டுமிராண்டித்தனமானது. அநாகரீகமானது செயல்களில் ஈடுபடுவர்கள் இதுகாலத்தான் செய்கிறார்கள்.

இந்தமாதிரி அநாகரீகமான செயல்களுக்கு எதிராக உலக மக்கள் ஒன்று திரண்டு போராட வேண்டும்.

அமெரிக்காவின் ஆயுத பலம் உலகில் சுதந்திரத்தை நிலைநாட்டும் நோக்கிற்காகவே பயன்படுத்தப் படும் — இப்படி அவர் கூறினார்.

சர்வாதிகாரிகள் என்ற தொனியில் அவர், லிபிய தலைவர் கேர்ணல் கடாபியைக் மீண்டும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

மெழுகில் ராஜீவ் சிலை

லண்டன், ஏப் 27 இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியின் மெழுகு ஞாலான உருவச்சிலை ஒன்று லண்டனிலுள்ள உலகப் புகழ்வாய்ந்த மேடம் ரஸ்ரெடின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

வங்க உடையணிந்து மிக கவர்ச்சியான தோற்றமளிக்கும் ராஜீவின் இவ்வுருவச்சிலை பார்வையாளரை பெரிதும் கவர்ந்துள்ளது.

வருடமொன்றுக்கு முப்பது லட்சம் பார்வையாளர் வந்து போகும் இவ்வருங்காட்சியகத்தில் ஏற்கனவே காலஞ்சென்ற பிரதமர் இந்திரா காந்தி, பிரான்ஸ் அதிபர் மிதிரண்ட், இங்கிலாந்தின் பிரதமர் தட்சர் ஆகியோரின் உருவச்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

போர்க் கப்பல் கட்டப்படும்

புதுடில்லி, ஏப். 27 கோவா கப்பல் கட்டும் கூடத்தில் 86 - 87 ஆம் ஆண்டில் போர்க்கப்பல்கள் கட்டப்படும்

இதற்கான பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

எரிசாராயம் அருந்திய 7 பேர் பலி

புதுடில்லி, ஏப்ரல் 27 நாக்பூரில் எரிசாராயம் அருந்திய ஏழு பேர் உயிரிழந்தனர். பலர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருக்கின்றனர்.

சட்ட விரோதமாக சாராயம் விற்கும் ஓரிடத்தில் இவர்கள் குடிவகைகளை அருந்தியதாகக் கூறப்படுகிறது.

பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

வெளி உலகில்

அணுசக்தி சாதனம் பிரான்ஸ் வெடிக்க வைத்தது

நியூஸிலாந்துப் பிரதமர் கண்டனம்

லண்டன், ஏப் 27 பிரான்ஸ் அணுசக்தி சாதனம் ஒன்றை நேற்று வெடிக்க வைத்தது.

நியூஸிலாந்துப் பிரதமர் டேவிட் லாங்கோ வந்த அணுசக்தி வெடிப்பை வெகுவாக கண்டித்திருக்கிறார்.

மொரடோவா ஏற்றரஸ் என்ற இடத்தில் இந்தச் சாதனம் வெடிக்க வைக்கப்பட்டது.

இந்தமை செயல்கள் அணு ஆயுத கட்டுப்பாடு தொடர்பான சர்வதேச உடன்படிக்கை ஒன்று உடனடியாக அமுல் செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன என நியூஸிலாந்து பிரதமர் தெரிவித்தார்.

நிலநடுக்கம் வட இந்தியாவில்

2 பேர் மரணம்; பலர் காயம்

புதுடில்லி, ஏப் 27 வட இந்தியாவில் சனிக்கிழமையன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பல பழைய வீடுகள் தொருங்கின.

டில்லி, ஸ்ரீநகர், சிம்லா, மண்டி, சண்டிகார் ஆகிய இடங்களில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது

சில செக்கன்கள் நீடித்த நிலநடுக்கத்தில் பெருந்தொகையான உடைமைகள் சேதமடைந்தன.

அவசர நிவாரணம், மீட்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் கூலிப்படை

பிரிட்டனிடம் இந்தியா கவலை

புதுடில்லி, ஏப். 28 பிரிட்டிஷ் கூலிப்படைகள், இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிப்பது, பிரிட்டன் ஆயுதங்கள் வழங்குவது ஆகியன குறித்து பிரிட்டிஷ் அரசிடம் இந்தியா கவலை தெரிவித்துள்ளது

இந்தக்கவலை இலங்கை, பிரிட்டனிடம் ஆயுதம் வாங்குவது பிரிட்டிஷ் கூலிப்படைகள் இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிப்பது ஆகியவற்றுக்கு பிரிட்டிஷ் அரசு பொறுப்பு ஆகாது என்று எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படி இணை அமைச்சர் நாராயணன் குறிப்பிட்டார்.

அமைச்சர் கே ஆர். நாராயணன், புதுடில்லி நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

மிழக்கு மாகாணத்தில் கப்பாவிக்கு டிமக்கள் கொலைப்பட்ட சம்பவங்களில் ஈடுபட்ட அதிரடிப் படைப் பிரிவினருக்கு பிரிட்டிஷ் கூலிப்படையினர்தான் பயிற்சிஅளித்து உள்ளனர்.

மாணவர் சுவரொட்டி போட்டி

உடுப்பிட்டி, ஏப் 28 தாவல் நிலைக்களம் சுகாதார அமைச்சின் ஆதரவோடு பாடசாலை மாணவர்களிடையே 'புகைத்தல் கெடுதல் விளைவிக்கும்'' என்னும் தலைப்பில் சுவரொட்டிப் போட்டி ஒன்றை நடத்த உள்ளது.

15 வயதுக்குக் கீழ்ப்பட்ட மாணவர்களுக்கும் 15 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்குமாக இரண்டு பிரிவாக மும்மொழிகளிலும் இப்போட்டி நடத்தப்படும்.

இச்சுவரொட்டிக்கு முதல் பரிசாக 1500 ரூபாவும், இரண்டாம் பரிசாக 1000 ரூபாவும், மூன்றாவது பரிசாக 500 ரூபாவும், 100 ரூபா வீதம் பத்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபர்கள் மூலமாகமே மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஐயனார் கோயில் சிலை தகர்ப்பு

உடுவில், ஏப். 28 கன்னாகத்தில் மிகவும் பழைமை வாய்ந்த ஐயனார் கோயிலில் ஐயனார் சிலையும் சனீஸ்வரன் சிலையும் தகர்க்கப்பட்டுள்ளன.

சிலைகளுக்கு அடியில் விலைமதிப்பற்ற பொக்கிஷங்கள் இருக்கலாம் என்றுஎண்ணியே திருடர் சிலைகளை தகர்த்து இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

சைவம் என்பது இந்து சமயத்தின் பகுதி என்பது கண்டிக்கத்தக்கது

நூல் வெளியீட்டுவிழாவில் உரை

கிளிநொச்சி, ஏப் 28 இந்து மதம் என்பது இடையிடுவுறந்த பெயர் ஆகும். சைவசமயம் என்பதே தொன்மையானது இதை அறியாமல் சிலர் சைவம் என்பது இந்து சமயத்தின் ஒரு பகுதி எனக் கூறுவது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் சொல்லிச்செல்வர் திரு த. கப்பிரமணியம் இப்படிக் கூறினார்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலில் நடந்த சைவநற்சிந்தனை நூல் வெளியீட்டு விழா திருநெறிய கழகத் தலைவர் பா. கணேசபிள்ளை தலைமையில் நடந்தது.

விழாவில்பொறியியலாளர் தொடர்ந்து பேசுகையில் சைவத்தின் தொன்மையையும் பெருமையையும் நிலைநாட்டும் வகையில் நல்ல சிந்தனைகள் பதிந்தே தொகுத்து 'சைவநற்சிந்தனை' எனும் நூல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதனை சைவ அன்பர்கள் யாவரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்றார்.

நூலின் ஆய்வுரையை சைவப்புலவர் க. குமாரசுவாமி நிகழ்த்துகையில் "இந்து வேறு சைவம் வேறு தன்மப்பட நேருகிறது. சிந்திக்க வேண்டும். நாம் செய்த தீவினைகளின் பலன் தான் நம்மை ஆட்டி வைக்கிறது கந்தபுராணம் முதலிய சமய நூல்களில் இதற்கு ஆதாரங்கள் உண்டு. எமது தவறுகளுக்காக நாம் ஆண்டவனை நோவதில் பயனில்லை.

எமது தவறுகளை உணர்ந்து நல்ல வாழ்க்கையை நாம் அமைக்க வேண்டும். இதற்கான வழிவகைகள் இந்த சைவ நற்சிந்தனை நூலிலே சொல்லப்பட்டிருக்கிறது என்றார்.

கோப்பாய் சிவம் எழுதிய இந் நூலின் முதற் பிரதியை கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் பரிபாலன சபைத் தலைவர் த. சோமசுந்தரமும் சிறப்புப் பிரதியை வே. இராசேந்திரம், கா. நாகலிங்கம், சி. யோகானந்தசிவம், இ. தியாகலிங்கம், சி. நடராசா ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

விழாவில் கிளிநொச்சி திருநெறிய கழகம் நடத்திய சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை கழகத்தின் காப்பாளரான பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் திரு. ம. சபாரத்தினம் வழங்கினார்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் பிரதம குரு இரத்தினவேல் வரக் குருக்கள் ஆசியுரையும், ஓய்வு பெற்ற பொலீஸ் அதிகாரி மு. இராமநாதன் வாழ்த்துரையும், ஆசிரியர் நா. சேதிநாதன் வரவேற்புரையும் நல்க ப சிவானந்த சர்மா நன்றியுரை கூறினார்.

மாணவர் சனசமூக நிலையங்களை இணைத்து சங்கம்

உடுப்பிட்டி ஏப். 28 உடுப்பிட்டிப் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களை இணைத்து ஒன்றியம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது

இந்த ஒன்றியத்தில் உடுப்பிட்டி உப அலுவலகப் பகுதியில் உள்ள 45 சனசமூக நிலையங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

ஒன்றியத்தின் தலைவராக திரு வ. வரணகுலசிங்கமும், செயலாளராக திரு. கொ. குணசிங்கமும், பொருளாளராக திரு. ச. ஜெயக்கொடியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலக்கிய அறிஞர்கள் கூட்டம்

ஊர்காவற்றுறை,ஏப். 28 யாழ் மாவட்டத்திற்கான கண்டுப்பேரவை ஒன்றினை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள யாழ் அரச அதிபர் திரு.மு.பஞ்சலிங்கம், அதற்கு முன்னோடியாக இலக்கியத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் கூட்டமொன்றை இன்று காலை நடத்துகின்றார்

அரசாங்க செயலகத்தில் இடம்பெறும் இக் கூட்டத்திற்கு எழுத்தாளர்கள், கவிஞர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இத்துறைக்கான உப குழு வொன்று இன்று தெரிவு செய்யப்படும்.

சிற்றாழியருக்கு 8மணி நேர வேலை

உடுப்பிட்டி, ஏப் 28 மத்திகை அரசினர் வைத்திய சாலையில் சிற்றாழியர்களுக்கு 8 மணி நேர வேலை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதுவரை இவ்வைத்திய சாலையில் 12 மணி நேர வேலை சிற்றாழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது

இதில் எட்டு மணி தவிர்ந்த ஏனைய நான்கு மணி நேர வேலைகளுக்கு மாடுப்படுத்தப்பட்ட மேலதிகப்பணம் சம்பளத்துடன் வழங்கப்பட்டு வந்தது.

கூட்டுத்தாபன கூட்டுறவு ஊழியருக்கு நிவாரணம் அளிக்க கோரிக்கை

வடக்கு, கிழக்கில் நடைபெறும் யுத்த நிலைமையினாலும் அரச அடக்கு முறையினாலும் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழும் கூட்டுத்தாபன, கூட்டுறவு ஊழியர்களின் சேவைப் பிரச்சினைகள் மற்றும் பொதுப் பிரச்சினைகள் தொடர்பாக விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டும்.

திரு. வாசுதேவ நாணயக்கார தலைமையிலான கூட்டுத்தாபன,கூட்டுறவு வர்த்தக ஊழியர் சங்கம் மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளது

குறிப்பாக மேற்படி ஊழியர்களின் சேவைப் பிரச்சினைகள் தொடர்பாக இவர்கள் கொழும்புக்குச் செல்வதில் பல வேறு சிரமங்கள் இருப்பதால் இப்பிரச்சினைகளை கவனிப்பதற்கு விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சங்கத்தில் அங்கத்துவம் வகிக்காதவர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கிலுள்ள யுத்த நிலைமை காரணமாக அப்பகுதிகளிலுள்ள கூட்டுத்தாபன,கூட்டுறவு வர்த்தக ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படுவதற்கும்– ஆயுதக் காப்புறுதிப் பாதுகாப்பு பெற்றுக்கொள்வதற்கும் ஆவன செய்யப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சைவ நற்சிந்தனை

பொய்யாமொழி

குறள்:

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி.

பொருள்:

ஒழுக்கத்தில் எவரும் மேம்பாட்டை அடைவர்; ஒழுக்கத்தில் இருந்து தவறுதலால் அடையத்தகாத பெரும் பழியை அடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த நாள்—திருமண வைபவங்கள்
பூப்புனித நீராட்டு விழா—புதுமனை புகு விழா
போன்ற மங்கள வைபவங்களைத்
தத்ரூபமாக ஒளிப்பதிவு செய்துகொள்ள

வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
T'Phone: 22477

உதயன்

28 04 1986 திங்கட்கிழமை

தமிழ், இந்தி, ஆங்கிலம்
ஒரிஜினல் வீடியோ பிரதிகளை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'hone: 22477

சுவரொட்டி போட்டி!

பலாலி, ஏப்.28

வவுனியா, அச்சுவேலி, புத்தூர், நீர்வேலிப் பகுதிகளில் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா ஈடுபடும் முறையை ஆதரித்தும் எதிர்த்தும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

"தமிழ் மக்களே" என்ற பெயரில் எழுதப்பட்ட இந்த இரண்டு வகையான சுவரொட்டிகளிலும், ஒரு சுவரொட்டிக்கு மற்றைச் சுவரொட்டி பதில் கூறும்தோரணியில் எழுதப்பட்டிருக்கிறது.

சில சுவரொட்டிகள் இரவோடிரவாக கிழிக்கப்பட்டும், அழிக்கப்பட்டும், அவ்விடத்தில் வேறு புதிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டும் காணப்படுகின்றது.

இவ்விரண்டு சுவரொட்டிகளையும் வாசிக்கும் மக்கள் இச்சுவரொட்டிகளிலுள்ள முரண்பாடுகளின் கருத்துப் புரியாது அங்கலாய்ப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

விபத்தில் இளைஞர் பலி!

காங்கேசன்துறை, ஏப். 28

மோட்டார் சைக்கிள் விபத்தில் 23 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுக் காலை மாவிட்டபுரம் அரசடியில் இந்த விபத்து நிகழ்ந்தது.

இவ்விபத்தில் சேர்த்த விஜயகுமார் என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

பலத்த காயம் அடைந்த நிலையில் அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர் அங்கு மரணமானார்.

ஐநாவுக்கு முன்னர்
இனப்பிரச்சினை தீர்வில் முன்னேற்றம்

நிதி அமைச்சர் நம்பிக்கை

பாரிஸ், ஏப்ரல் 27

எதிர்வரும் ஜூன் மாதத்தில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் முன்னேற்றம் ஏற்பட்டுவிடும் என்று நிதி அமைச்சர் ரொனி டி மெல் நம்பிக்கை வெளியிட்டார்.

பி. பி. சி. உலக சேவைக்கு அளித்த பேட்டியில் நிதி அமைச்சர் மேலும் சொன்னதாவது:

எல்லாம் நல்லபடியாக முடிந்தால் பேச்சுக்களில் முன்னேற்றம் காணமுடியும்.

புதிய யோசனைகள் பற்றி முழு விவரங்களையும் சொல்ல முடியாது உள்ளது.

அவை மாகாணசபையில் அதிகாரங்களை பரவலாக்கல் செய்வதற்கு உதவும்.

இப்படி நிதி அமைச்சர் சொன்னார்.

தேடுதல்

கிளிநொச்சி, ஏப். 28

நேற்றுக் காலை கமர் பகுதிக்கு மேற்பட்ட கிராம வளைவுகளில் சென்ற இராணுவம் புளியம்பொக்கணை, தருமபுரம் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

கிளிநொச்சி முகாமிலிருந்து வெளிநாட்டு அதிகாரி ஒருவர் உட்பட உயர் இராணுவ அதிகாரிகளும் இத்தேடுதலின் போது சென்றதாகவும்-

ஆகியிறவு, கிளிநொச்சி ஆனையிறவு முகாம்களில் இருந்து வேறு பாதைகளூடாக இராணுவம் மேற்படி பகுதிக்குச் சென்று சுற்றி வளைத்துச் சோதனையிட்டதாகவும் கூறப்படுகிறது

அலோசியஸ் தெரிவு

15 வெகுஜன கூட்டு அமைப்புக் குழுவின் தற்காலிக பொதுச் செயலாளராக திரு.ம. அலோசியஸ் தெரிவு செய்யப்பட்டார்.

அ.தி.மு.க. அமைப்பின் அனுசரணையுடன் 15 வெகுஜன கூட்டு அமைப்பின் குழு திரு. துரைராஜசிங்கத் தலைமையில் அ.தி.மு.க. செயலகத்தில் நேற்றுக் கூடியது.

திரு. இரா. பொன். மதிமுகராசாவின் இடத்துக்கே திரு. அலோசியஸ் தெரிவு செய்யப்பட்டார்.

மே தினம்

மே தினவிழா திட்டமிட்டபடி நடைபெறும்.

இப்படி 15 வெகுஜன கூட்டு அமைப்பின் தற்காலிகச் செயலாளர் திரு ம. அலோசியஸ் அறிவித்துள்ளார்.

மதிமுகராசாவை விடுவிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 28

கடத்தப்பட்ட திரு. பொன் மதிமுகராசாவை அவரது பொதுத் தொண்டுக்கு மதிப்ளித்து விடுவிக்கும்படி சம்பந்தப்பட்ட இயக்கங்களுக்கு அ.தி.மு.க. அமைப்பின் அனுசரணையுடனான 15 வெகுஜனக்கூட்டு அமைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளதாவது;

திரு. மதிமுகராசா வெகுஜன அமைப்பின் ஆணி வேராக விளங்கியவர். அரச அடக்குமுறைக்கு எதிராக உழைத்தவர்.

பொருளாதார நிலையில் கூட மிகவும் சாமான்யர். இதான்றே தொழிலைக் கொண்டவர். பல குழந்தைகளுக்குத் தந்தை. அவரின் குடும்பத்துக்கும் பொதுத் தொண்டுக்கும் மதிப்பளித்து அவரை உடனடியாகச் சம்பந்தப்பட்ட இயக்கங்கள் விடுவிக்க முன்வரவேண்டும்.

இப்படி அந்த வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது.

கண்ணீர் அஞ்சலி
48 ஆம் நாள் நினைவஞ்சலி

ஓர நாள்நடந்தது இதயம் நிய
நீங்கிய இதயம் நெருப்பால் அல்ல.
கயவர்கூட்டம் கட்டிய செய்தி செய்தியல்ல
அது கபடச் செய்தி
உத்தம தோழன் தாசன் அவனை
மக்கள்தாசன் மனநிறை தாசன்
அவனையும்
அவனுக்கண் தோழர் தம்மையும்—சுட்டனர்
துப்பாக்கி தம்மால் துப்பு ஆக்கி விட்டனர்
நெருப்பெனும் தீக்கு—
இந்த செய்தியால்—
இரண்டு சிறுகைகள் ஆணும் பெண்ணும்
கலலெறியுட்ட ஆடி போன்று—இதயம்
நொருங்கி ஏதோ செய்தனர்
அச்சுவேலி ஆண்மைச் சிங்கம்
உதயராதம் சிறி எழுந்தனன்—அம்மா
தாசன் அண்ணா போனான்—நானும்
போவேன் அவர்களைத் தொலைக்க—ஏவல்
ஆட்களைத் துணைக்க—என்றே
ஊஞ்சினம் எடுத்துச் சென்ற—அவனை
இன்று ஊர்வலம்சென்று தாசன்முன்னே
இடம் பிடித்தனனே—வீரத் தவிசு

செல்வன்
கப்பையா உதயராதம்

செல்வி வல்லிபுரம்
தவனேஸ்வரி

இதுமட்டுமல்ல,
கரவெலாய்ப்பகுதி நீலன் குளத்து
வல்லிபுரத்தின் இளைய சிறுமி
தவத்தின் புதல்வி தவனேஸ்வரியே
வயது கொஞ்சம் வசமோ தாசன்
தாசன் என்றால் தளிர்க்கும் உள்ளம்
— தாசன் இல்லை

கொதித்தது உள்ளம்
எதிரியின் புகையின் படங்கள்
புகைத்தது நெருப்பாய்—சிறுமி
கைகால் எரித்தனன்
தாஸ் அண்ணா யானும் எரித்தனன்
அந்தத் துரோகியை—என்ற நிம்மதி
சவளிடம் இருந்தும்
நியாயம் கேட்க நீண்ட ஊர்வலத்தில்
சென்றனர்—முன்னம் முன்னே
சென்றனள்!

சென்றனள் நீதிகேட்டு—அன்று
கிடைத்தது துப்பாக்கிப் பரிசு
இரண்டு சிறுகைகள் காட்டிய பாதை
இதயம் கொண்ட எவர்க்கும் உறுத்தும்
கண்கள் உள்ள எவர்க்கும்—நீர் வரும்
நாலுபேர் சென்ன வழியை அல்ல
இருவர் காட்டிய பாதை தன்னில்
நாமும் நடப்போம்தாசன் குழுவைத்தேடி

விலாசம்:-
பாரதி வீதி,
பத்தமேனி,
அச்சுவேலி.

கரவை பொதுமக்கள்

விளையாட்டரங்கு

வடக்கில்

கரபந்தாட்டப் போட்டி
நான்கு பிரிவுகளில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ் மாவட்ட கரபந்தாட்டச் சங்கம் நடத்தும் கரபந்தாட்ட சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை கரபந்தாட்டக் கட்டுப்பாட்டுச் சபையின் அனுசரணையுடன் நடத்தப்படும் இந்தப் போட்டிக்கான விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசித் திகதி எதிர்வரும் 30 ஆம் திகதி ஆகும்.

'பிசற் அப்' முறையை பிரபல்யம் அடையச் செய்வதற்காக இந்தப் போட்டி நடத்தப்படுகிறது

நான்கு பிரிவுகளாக இப்போட்டி நடைபெறும். அந்த நான்கு பிரிவுகளும் வருமாறு:-

'அ' பிரிவு— செற்அப் முறை. இதில் பதினாலு கொண்ட வீரர்கள் மற்றைய போட்டிகளில் பங்கு பற்ற முடியாது.

'ஆ' பிரிவு 28 வயதுக்கு உட்பட்டோர் (31 12 1958க்குப் பின் பிறந்தோர்)

'இ' பிரிவு— 20 வயதுக்கு உட்பட்டோர் (31. 12. 1966 க்குப் பின் பிறந்தோர்)

'ஈ' பிரிவு— இந்தப் பிரிவுப் போட்டிகளில் வயதுக் கட்டுப்பாடு இல்லாமல் எவரும் பங்கு பற்றலாம்.

ஆ. இ. ஈ பிரிவுகளில் நடைபெறும் போட்டிகளில் 'பிசற் அப் முறை'யில் ஓவர் கேம் ஆடலாம்.

சகல போட்டிகளும் சர்வதேச கரபந்தாட்டச் சட்டத்திற்கு அமைய நடத்தப்படும்

மேலதிக விவரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் கீழ்க்காணும் முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

கே. குணரெத்தினம் புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம் கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம், இல 61 ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். எவ். தார்சியஸ், குருநகர் சனசமூக நிலையம், யாழ்ப்பாணம். கே. ஏகாம்பரம் இல. 9 இராச வீதி, நல்லூர்.

இந்தியக் குழு :

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டங்களில் வேறுபாடான கருத்துக்கள் நிலவுகின்றன.

தீர்வு ஒன்றிற்கு அரசாங்கத்தை இணங்கச் செய்வதற்கு முன்னர் அதன் உட்கூறுகள் குறித்து அறிந்துகொள்வது அவசியம் எனக் கருதப்படுகிறது.

இந்த அடிப்படையில் இனப் அமைச்சர் தெம்பரம் தலைமையிலான குழு, அரசாங்கத்தின் பல்வேறு தலைவர்களுடனும் பேசி அவர்களது கருத்துக்களை அறிந்து கொள்ளும்.

ஏற்கனவே வெளிவிவகார அமைச்சர் ஜனாப். ஏ.எல்.எம்.ஹமீதுதேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி, காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திஸாநாயக்கா ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்த தூதுக்குழு விருப்பம் தெரிவித்திருக்கிறது அதே போன்று அரசில் அங்கம் வகிக்கும் மூன்று தமிழ் அமைச்சர்களுடன் தூதுக் குழு பேச்சு நடத்தும்.

இதே வேளை இந்திய தூதுக்குழு இலங்கையில் இருக்கும் வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அவர்களுக்கு வேண்டிய தகவல்களை வழங்கவும் —

பேச்சுவார்த்தைகளில் உதவி செய்யவும் —

கொழும்பில் தங்கியிருக்கும் மன்னார் முன்னாள் எம். பி திரு. பி. எஸ். சூசைதாசனுக்கு பணிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தியத் தூதுக்குழு புதுடில்லியிலிருந்து புறப்பட்டு பம்பாய் மார்க்கமாக கொழும்பு வந்து சேரும் வழியில் அவர்கள் சென்னையில் தரிக்கமாட்டார்கள் என அறியப்பட்டது.

இலங்கை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பியதும் முன் கண்ட அபாய அறிவிப்பை மிகவும் பூட்கமான விதத்தில் அரச உயர் வட்டாரங்களுக்கு எடுத்துச் சொன்னார் என்று தெரிய வருகிறது.

இந்திய மத்திய அரசு இலங்கையில் ஒரு நாளும் தலையிடப்போவது இல்லை—

அதனைக் கருத்தில் கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதை இழுத்தடித்துக் கொண்டு போகக் கூடாது—

மிக விரைவில் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டாக வேண்டும். காணத் தவறுவதால் தமிழ்நாடு அரசு கொந்தளித்து எழும் அபாய நிலைமை தான் உருவாகி வருகிறது—

தமிழ்நாடு ஆவேசம் கொள்ளுவதை இந்திய மத்திய அரசினாலும் தடுத்து நிறுத்த முடியாமல் போய்விடும். —இவ்வாறு அந்த அமைச்சர் தெரிவித்தாராம்.

இந்தியாவும்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வதாவது:-

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் தோல்வி கண்டால் என்ன மாதிரியான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு இந்தியாவைச் சார்ந்தது.

இந்தியாவையே முற்றுமுழுதாக நம்பியுள்ளோம்.

இந்திய அரசு, தமிழ் மக்களைக் கைவிட மாட்டாது.

இலங்கை அரசுடன் எந்த நேரடிப் பேச்சுக்களையும் தொடங்குவதற்கு முன்னர் அப்பாவித் தமிழர் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டும்.

இப்படி திரு. அமிர்தலிங்கம் பி.பி.சி. பேட்டியில் சொன்னார்.

இந்திய தூது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தில் பயிற்றுப் பட்டம் பெற்றவர். சட்டத்தரணியும் கூட.

பிரதமர் ராஜீவ் காந்தியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்.

தூதுக்குழுவில் இன்னொரு உறுப்பினரான திரு எம். பாலசுப்ரமணியம், ஒரு சட்டத்தரணி.

இந்திய தேசிய பாதுகாப்புச் சபையில் தலைவரான திரு. ஜி. பார்த்தசாரதியின் நெருங்கிய ஆலோசகர்.

ஜம்மு — காஷ்மீர், மிஸோராம் பிரச்சினைகளுக்கு சட்ட ஆலோசனைகள் வழங்கியவர்.

மற்ற இரண்டு உறுப்பினர்கள் வருமாறு: திரு. ரஞ்சன் பட்டாச்சார்ஜி, வெளிவிவகார அமைச்சர் திரு. ரொமேஷ் பண்டாரி, முன்னாள் வெளிநாடுகளுக்கான செயலாளர்.

2-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் காசிப்பிள்ளை சுந்தரம்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

அன்னையின் மடியில்:- 2 - 5 - 1910
ஆண்டவன் அடியில்:- 28 - 4 - 1984

எங்கள் குடும்ப விளக்காய்
ஒளி வீசி நின்று எம்மைக்
காலமெல்லாம் கண்ணின் இமை
போலக் காத்து வந்த எங்கள்
அன்புத் தெய்வமே அப்பா!
எங்களை யெல்லாம் ஆறுதலாகி
ஆழ்த்தி விட்டுக் காத்திராப்
பிரகாரம் காலன் வசப்பட்டுக்
கடவுளடி சேர்ந்த அதிர்ச்சி
நீங்குமுன் ஈராண்டுகள்
ஓடிமறைந்து விட்டனவே.
உங்கள் அன்பும் பண்பும் பாசமும்
நிறைந்த புன்னகை தவழும் திருமுகம்
எந்நேரமும் எம்முள்ளத்தோன்றியபடி
இருக்கிறது ஆண்டுகள் பலகடந்தாலும்
உங்கள் அன்புத் திருவுருவம் எங்கள்
இதயங்களை விட்டு என்றும்
நீங்காது. நீங்கள் தெய்வமாக
ஒவ்வொரு நிமிஷமும் எம்மைச்
சரியான பாதையில் வழி நடத்தி
மாறும் உங்களின் எண்ணங்களைச்
செயல்படுத்தும் திறனை எமக்குத்
தந்தருளுமாறு இறைஞ்சுகிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல பரமனின் பாதாரவிந்தங்களில் எங்கள் கண்ணீர் மலர்களாக நினைவும் அர்ச்சிக்கிறோம்.

உங்கள் மறைவால் ஆறுதலுறும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
இலகடிவளவு, அளவெட்டி.

ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 17 * 2 1942 *

மறைவு 28 * 4 1985 *

விநாயகர் செல்வராசா

ஆருயிர்த் துணைவ, அன்பின் திருவுருவே
என் வாழ்வின் ஒளி விளக்கே நீங்கள் சாதனைகளோர் களஞ்சியமாய் நன்மான வீரனாய் கீர்மலை ராஜனாய் வீரசிங்கமாய் தோளிலிற்புலி பொறித்துத் தமிழ்த் தாய்க்கு சேவை செய்து என்னுடன் பதினைந்து ஆண்டு காலம் இணைபிரியாது வாழ்ந்தீர்கள். எனக்குப் பாலைவனத்துப் பசுஞ் சோலையாகவே இருந்தீர்கள் உங்களை இழந்து நானும் பிள்ளைகளும் வாடி வதங்குகிறோம். தனிமையில் துடிக்கிறோம். உதவியிழந்தே தவிக்கிறோம். ஓராண்டென்ன பல ஆயிரம் ஆண்டுகளானாலும் உங்களைப் பற்றிய ஏக்கமும் சஞ்சலமும் என்றும் மாறாது. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

திருமதி. க. செல்வராசா உங்கள் பிரியாத
நகுலேஸ்வர வீதி, கலங்கும் அன்பு மனைவியும்
கிரிமலை. அருமைச் செல்வங்களும்

யூனிவேசல் ஏஜென்சி

(பெற்றோலியம் கூட்டுத்தாபன முகவர்)
125 (455) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சவூதி அரேபியா
ஆஸ்பத்திரி கிளினிக்கு

பிரயாண ஒழுங்குகள் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.
அத்துடன் எமது முகவர் உங்களை 6ஆம் திகதி
டென்மார்க் அழைத்துச் செல்வார்.
மேலதிக விவரங்களுக்கு உடன் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமாசங்கர் பிரிண்டர்ஸ் லிமிட்டெட், 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 28-04-1986
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number Q J 60 N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org